10.3.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### பவானிசாகர் அணை இன்று திறப்பு

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையில் இருந்து செவ்வாய்க்கிழமை (மார்ச் 10) முதல் தண்ணீர் திறந்து விடப்படும் என்று முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அறிவித்தார். இதுகுறித்து திங்கள்கிழமை அவர் வெளியிட்ட அறிவிப்பு: ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையில் இருந்து அரக்கன்கோட்டை, தடப்பள்ளி வாய்க்கால்கள் மூலம் பாசனம் பெறும் நிலங்களின் இரண்டாம் போக பாசனத்துக்குக் கூடுதலாக தண்ணீர் திறந்து விட வேண்டுமென விவசாயிகளிடம் இருந்து கோரிக்கை கள் வந்துள்ளன. இந்தக் கோரிக்கைகளை ஏற்று, செவ்வாய்க் கிழமை (மார்ச் 10) முதல் தண்ணீர் திறந்துவிட உத்தரவிடப்படுகிறது. இதனால், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப் பாளையம், பவானி வட்டங்களிலுள்ள 24,504 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் என்று ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

### மூலிகை சாகுபடியாளர்களுக்கு ரூ. 6.83 லட்சம் மானியம் அளிப்பு

வேதாரண்யத்தை அடுத்த புஷ்பவனம், பெரியகுத்தகை கிராமங்களில் கார்த்திகை கிழங்கு எனப்படும் மூலிகை சாகுபடி விவசாயிகளுக்கு தோட்டக் கலைத் துறை சார்பில் மானியத் தொகையாக 6,83,718 ரூபாய் ஞாயிற்றுக்கிழமை அளிக்கப்பட்டது. புஷ்பவனம் கிராமத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு கார்த்திகை கிழங்கு உற்பத்தியாளர் நலச் சங்க தலைவர் ஜி. நடராஜன் தலைமை வகித்தார். தோட்டக் கலை உதவி அலுவலர் எஸ். வைரவமூர்த்தி முன்னிலை வகித்தார். விழாவில் பங்கேற்ற எம்எல்ஏ என்.வி. காமராஜ், 88 விவசாயிகளுக்கு மானியத்

தொகையாக 6,83,718 ரூபாய் வழங்கினார். நிகழ்ச்சியில், சங்கத்தின் செயலாளர் த. கந்தசாமி, பொருளாளர் வி. வைரமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## வேளாண் பேராசிரியருக்கு பெல்லோஷிப் விருது

திருப்பதிசாரம் வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியருக்கு பெல்லோஷிப் விருது கிடைத்துள்ளது. திருப்பதிசாரம் வேளாண் அறிவியல் நிலையத்தில் பேராசிரியராகப் பணியாற்றி வருபவர் சு. இருளாண்டி. இவருக்கு பயிர்களைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களை உயிரியல் முறைகள் மூலமாக மிகச் சிறப்பாக கட்டுப்படுத்தியதற்காக புதுதில்லியிலுள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கீழ் பெங்களூருவில் இயங்கி வரும் தேசிய வேளாண் பூச்சி வளங்கள் பணியகத்தின் பயோகன்ரோல் அட்வான்ஸ்மென்ட் சங்கத்தின் பெல்லோஷிப் விருது கிடைத்துள்ளது. இதற்கான விருது வழங்கும் நிகழ்ச்சியில் விருதை, இச்சங்கத்தின் தலைவர் ஆபிரகாம் வர்கீஸ் இவருக்கு வழங்கினார். இதில் சங்கச் செயலர் டி. வெங்கடேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். விருது பெற்ற பேராசிரியர் இருளாண்டியை திருப்பதிசாரம் வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர்கள் மற்றும் விவசாயிகள் பாராட்டினர்.

## தமிழகத்தில் முந்திரி கழகம்: சிஐடியூ வலியுறுத்தல்

கேரளத்தைப்போல் தமிழகத்திலும் முந்திரி கழகம் அமைக்க வேண்டும் என சிஐடியூ தமிழ்நாடு முந்திரி பருப்பு தொழிலாளர் சங்கம் வலியுறுத்தி யுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 400 முந்திரி ஆலைகள் செயல்பட்டு வருகின்றன. இதில், சுமார் 1 லட்சம் தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இம்மாவட்டத்தில் பெரும்பாலானோர் முந்திரி தொழிலையும், ரப்பர் தொழிலையும் நம்பியே வாழ்ந்து வரும் நிலையில் அதுசார்ந்த பெரிய தொழில் நிறுவனங்கள் இல்லை. மத்திய, மாநில அரசுகளுக்கு பெருமளவு அன்னிய செலாவணியை ஈட்டிக்கொடுக்கும்

தொழிலாக முந்திரி தொழில் உள்ளது. இந்நிலையில், கடந்த 2 மாதங்களாக இத்தொழிலின் மூலப்பொருளான கச்சா முந்திரி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதையடுத்து தொழிலாளர்கள் வேலை இழந்து அவதிப்படுகின்றனர். தமிழகத்தில் புறம்போக்கு தரிசு நிலங்களிலும், அரசு நிலங்களிலும் முந்திரி விவசாயம் செய்வதன் மூலமாக தமிழகத்துக்கு தேவையான கச்சா முந்திரியை உருவாக்க முடியும். எனவே, கேரளத்தைப்போல் தமிழகத்திலும் முந்திரி கழகம் அமைத்து, தமிழகத்துக்கு தேவையான கச்சா முந்திரியை இறக்குமதி செய்யவும், விவசாயம் மூலமாக உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யவும், இங்கிருந்து முந்திரி பருப்பை ஏற்றுமதி செய்ய தேவையான அனைத்து நடவடிக்கை களையும் மேற்கொண்டு, முந்திரி ஆலைத் தொழிலாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை கிடைக்க நடவடிக்கை எடுக்கவும் மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி சி.ஐ.டி.யூ. முந்திரி பருப்பு தொழிலாளர் சங்க நிர்வாகக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டாதாக சங்கத்தின் பொதுச்செயலர் பி. சிங்காரன் தெரிவித்தார்.

## நெல்லையில் 6,367 டன் நெல் கொள்முதல்: மண்டல மேலாளர்



திருநெல்வேலி மாவட்டத்தில் நிகழ் பிசான பருவத்தில் 35 அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் இதுவரை 6,367 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக மண்டல மேலாளர் ஜான்மேத்யூ திங்கள்கிழமை தெரிவித்தார். வடகிழக்கு பருவ மழை வழக்கத்தை விட 161.5 சதவீதம் கூடுதலாக மழை பெய்ததால் நிகழ் பிசான பருவத்தில் தாமிரவருணி பாசனத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் நெல், வாழை, பயறு வகைகள் உள்ளிட்ட விளைப் பொருட்கள் 1.25 லட்சம் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 68,640 ஹெக்டேரில் நெல் நடவு செய்யப்பட்டது. அம்பை 16, ஆடுதுறை 45 போன்ற குறுகிய கால

நெற்பயிரும், கர்நாடகா பொன்னி போன்ற கூடுதல் கால நெற்பயிரும் சாகுபடி செய்யப்பட்டது. அதிகளவில் விவசாயிகள் அம்பை 16, ஆடுதுறை 45 நெல் ரகங்கள் சாகுபடி செய்துள்ளனர். தற்போது அறுவடை தொடங்கி நடைபெற்று வருகிறது. தென்காசி, கடையநல்லூர், கீழப்புலியூர், ஆழ்வார்குறிச்சி, கடையம், கீழஆம்பூர், விக்கிரமசிங்கபுரம், அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, சேரன்மகாதேவி, வள்ளியூர் உள்ளிட்ட பகுதியில் நெல் அறுவடை நடைபெற்று வருகிறது. இம்மாவட்டத்தில் 60 சதவீதம் நெல் அறுவடை முடிந்துள்ளது. ஹெக்டேருக்கு 6,000 முதல் 9,000 கிலோ வரை நெல் மகசூல் கிடைத்து வருவதாக வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். 35 மையங்கள்: நிகழ் பருவத்தில் வழக்கத்தை விட இம்மாவட்டத்தில் கூடுதலாக சாகுபடி செய்யப்பட்டுள்ளதால், அரசு நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் கூடுதலாக திறக்க வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று 35 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. நெல்கொள்முதல் குறித்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் ஜான்மேத்யூ திங்கள்கிழமை கூறியதாவது: நிகழ் பிசானப் பருவத்தில் நெல் சாகுபடி அதிகளவில் மேற்கொள்ளப் பட்டுள்ளதால், ஆட்சியரின் வேண்டுகோளை ஏற்று திருநெல்வேலி மாவட்டத்தில் 35 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு இயங்கி வருகிறது. மூன்றடைப்பு, கங்கைகொண்டானில் மேலும் 2 கொள்முதல் நிலையங்கள் திறக்கவும் ஏற்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் 35 கொள்முதல் நிலையங்கள் மூலம் மார்ச் 7 ஆம் தேதி 6,367 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும் 4,000 டன் கொள்முதல் செய்ய வாய்ப்புள்ளது. அந்தந்த கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளுக்கு கொள்முதல் செய்யும் நெல்லுக்கு உடனடியாக பணம் வழங்கப்பட்டு வருகிறது என்றார் அவர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## மரம் வளர்த்தல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

உத்திரமேரூர்: மரம் வளர்த்தலின் அவசியம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, திருப்புலிவனத்தில் நேற்று நடந்தது. புவி வெப்பமாதல் வனத்துறை சார்பில் நடந்த இந்த நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் பாதுகாத்தல் மற்றும் பூமி வெப்பமடைவதை தடுத்திட, மரங்களின் முக்கியத்துவம் குறித்தும், மரங்கள் அழிக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகள் குறித்தும், கலை நிகழ்ச்சிகள் மூலம் விளக்கப்பட்டது. மேலும், திருப்புலிவனம் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் மகளிர் குழுவினரை ஒருங்கிணைத்து, ஆலோசனைகள் வழங்கப்பட்டது. அப்போது, வனத்துறை சார்பில், இலவசமாக வழங்கப்படும் மரக்கன்று களை, விவசாயிகள் தங்கள் நிலங்களில் மொத்தமாகவோ அல்லது வயல் வரப்பு ஓரங்களிலோ நடவு செய்து, பொருளாதார நிலையினை உயர்த்திக் கொள்ளுவதுகுறித்துஅறிவுறுத்தப்பட்டது.

அறிவுரை

காஞ்சிபுரம் கோட்ட வனவியல் விரிவாக்க அலுவலர் ராஜேந்திரன் தலைமையில் நடந்த இந்நிகழ்ச்சியில், வனவியல் விரிவாக்க விளம்பர அலுவலர் செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டு அறிவுரை வழங்கினர்.

## தேர்வு ! : வன துறையின் திட்டத்திற்கு 15 கிராமங்கள்... : 2.10 லட்சம் மரக்கன்றுகள் நடவு செய்ய முடிவு

உத்திரமேரூர்: வனத்துறையின், தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமை திட்டத்தின் கீழ், 2015--16ம் ஆண்டில், பணிகள் மேற்கொள்ள, காஞ்சிபுரம் மாவட்டத்தில், 15 கிராமங்கள் தேர்வு

செய்யப்பட்டுள்ளன. இந்த கிராமங்களில், 1,050 ஏக்கர் நிலப்பரப்பில், 2 லட்சத்து ஆயிரம் மரக்கன்றுகள் நடவு செய்ய தீர்மானிக் கப்பட்டு உள்ளது. தமிழக அரசு மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் நிதியுதவியுடன், கடந்த 2012-13ம் நிதியாண்டு முதல், தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமை திட்டம் செயல் படுத்தப்பட்டுவருகிறது.

ஊடுபயிர்

இத்திட்டத்தின் கீழ், ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டத்திலும், குறிப்பிட்ட கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, அங்கு, பசுமை நிலப் பரப்பை உயர்த்தும் வகையில், மண் வகைக்கு ஏற்ற மரக்கன்று களை ஊடு பயிராக நடும் முறை செயல்படுத்தப்படுகிறது. அதன்படி, 2015-16ம் நிதி ஆண்டிற்காக, காஞ்சி புரம் மாவட்டத்தில், 15 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. உத்திரமேரூர் ஒன்றியத்தில் மானாமதி, இளநகர், அனுமந்தண்டலம், களியாம்பூண்டி, தண்டரை, திருப்புலிவனம், மருதம், வாடாதவூர், குண்ணவாக்கம், வெண்டிவாக்கம்; மதுராந்தகம் ஒன்றியத்திற்கு உட்பட்ட வையாவூர், நெல்லி, குமாரவாடி, கருணாகரச்சேரி, சூரை ஆகிய கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இந்த கிராமங்களின் ஒட்டுமொத்த நிலப்பரப்பில், 1,050 ஏக்கர் நிலப் பரப்பை பசுமையாக்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

1,050ஏக்கர்

இதற்காக, தனியார் பட்டா நிலங்களின் உரிமையாளர்கள் அனுமதியுடன், மண் வகைக்கு ஏற்ப, தேக்கு, குமிழ், வேம்பு, மகாகனி, வேங்கை, பெருமரம் போன்ற மரக்கன்றுகள் நடவு செய்யப்பட உள்ளன. இதுகுறித்து, காஞ்சிபுரம் கோட்ட வனவியல் விரிவாக்க அலுவலர் ராஜேந்திரன் கூறியதாவது: 1,050 ஏக்கர் நிலப்பரப்பில், 2 லட்சத்து 10 ஆயிரம் மரக்கன்றுகள் நடவு செய்து, பராமரிக்கப்பட உள்ளன. சிறு, குறு விவசாயிகள் என்றால், 4.9 ஏக்கருக்கு 500 மரக்கன்றுகள் நடவு செய்ய

வேண்டும். ஒரு மகளிர் சுய உதவிக்குழுவிற்கு 200 மரக்கன்றுகள் வீதம் வழங்கப்படும். அது, குழுவின் அனைத்து உறுப்பினர்களின் தேவைக்கு ஏற்ப பிரித்து வழங்கப்பட்டு, வீட்டுத் தோட்டத்தில் நடவு செய்யலாம். மரக்கன்றுகள் நடவு செய்த, 3 ஆண்டுகள் முடிவில், உயிர் செடிகள் அடிப்படையில், ஊக்கத் தொகை வழங்கப்படும். உரிய காலத்திற்கு பிறகு, மரங்களை நில உரிமையாளர்களே அறுவடை செய்து கொள்ளலாம். வனத்துறை உரிமை கோராது. இவ்வாறு, அவர் தெரிவித்துள்ளார். 3 ஆண்டுகள் முடிவில், உயிர் செடிகள் அடிப்படை யில், ஊக்கத்தொகை வழங்கப்படும். உரிய காலத்திற்கு பிறகு, மரங்களை நில உரிமையாளர்களே அறுவடை செய்து கொள்ளலாம்

## <u>விவசாயிகளுக்கான விழிப்புணர்வு முகாம்</u>

ஓசூர்:ஓசூர், எரிபட்டு ஆதார விதைப்பண்ணையில், விவசாயிகளுக்கான விழிப்புணர்வு முகாம் நடந்தது.ஓசூர் மத்திய பட்டு இனவள மைய இயக்குனர் டாக்டர் கனிகா திரிவேதி தலைமை வகித்தார். ஏத்தாபூர் விவசாய பல்கலைக்கழக பேராசிரியர் செந்தில்குமார், மத்திய பட்டு வாரியம் விஞ்ஞானி யுமாயூன் செரிப், முதன்மை விஞ்ஞானி லலிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் பட்டு நூல்களுக்கு, உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நல்ல வரவேற்பு உள்ளது. இதுவரை பட்டுப்புழுக்கள் வளர்ப்பதற்கு மல்பெரி இலைகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தன. ஆனால், ஆமணக்கு இலை, மரவள்ளி கிழங்கு இலை போன்றவற்றை பயன்படுத்தியும் பட்டுப்புழுக்களை வளர்க்கலாம்.இம்முறைக்கு எரிபட்டு வளர்ப்பு என்று பெயர். எரிபட்டு புழு வளர்ப்பிற்கு, 20 நாட்களே போதுமானது. மேலும், எரிபட்டு, ஒரு கிலோ, 120 முதல், 150 ரூபாய் வரை விற்பனையாகிறது. ஓசூரில் இதற்கு சாதகமான சூழ்நிலை நிலவுவதால் விவசாயிகள் அதிகளவில் எரிபட்டுக் கூடுகளை உற்பத்தி செய்து, நல்ல லாபம் பெறலாம் என, மத்திய பட்டு இனவள மைய இயக்குனர் கனிகா திரிவேதி

தெரிவித்தார்.முன்னதாக , எரிபட்டுக்கூடு வளர்ப்பு குறித்த கண்காட்சி நடந்தது. இதை, விவசாயிகள் மற்றும் பள்ளி மாணவ-மாணவியர் ஆர்வத்துடன் பார்வையிட்டனர். எரிபட்டு ஆதார விதைப்பண்ணை விஞ்ஞானி வேலாயுதன் நன்றி கூறினார்.

## 3,750 ஏக்கர் ! : திருந்திய நெல் சாகுபடி திட்டத்தில்... : நவரை பருவ நடவு பணிகள் தீவிரம்

பொன்னேரி: திருந்திய நெல் சாகுபடி திட்டத்தின் மூலம், நவரை பருவத்தில், அதிக மகசூல் பெறுவதற்காக, 3,750 ஏக்கர் பரப்பளவில், நடவுப்பணிகளை, விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர். மீஞ்சூர் ஒன்றியத்தில், சொர்ணவாரி, சம்பா, நவரை ஆகிய மூன்று பருவங்களில், ஆண்டுக்கு, 42,500 ஏக்கர் பரப்பளவில், நெல் பயிரிடப்படுகிறது. தற்போது, சம்பா பருவம் முடிந்து, 9,500 ஏக்கர் பரப்பளவில், பச்சை பயறு பயிரிடப்பட்டுஉள்ளது.

சீரானஇடைவெளியில்...

தற்போது, நவரை பருவத்திற்காக, சின்னகாவணம், கூடுவாஞ்சேரி, மேட்டுப்பாளையம் உள்ளிட்ட கிராமங்களில், 4,415 ஏக்கர் பரப்பளவில், நடவுப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில், 85 சதவீதம், திருந்திய நெல் சாகுபடி திட்டத்தின் மூலம், நெல் பயிரிடப்படுகிறது. இது, கடந்த ஆண்டை விட, 15 சதவீதம் அதிகமாகும். தற்போது, மேற்கண்ட திட்டத்தின் மூலம், நெல் பயிரிடுவதில், விவசாயிகளிடையே ஆர்வம் அதிகரித்து வருகிறது. கடந்த, 2013ம் ஆண்டில், 29,750 ஏக்கரிலும், 2014ம் ஆண்டில், 36,125 ஏக்கரிலும், திருந்திய நெல் சாகுபடி திட்டம் செயல்படுத்தப்பட்டு உள்ளது. இயந்திரம் மற்றும் பணியாட்கள் என, இரண்டு வகையில், நடவுப்பணிகள் மேற்கொள்ளும்போது, செடிக்கு செடி, வரிசைக்கு வரிசை என, 25 சதுர செ.மீட்டரில், சீரான இடைவெளி கிடைக்கிறது.

என்னபயன்?

அதன் மூலம், நெற்பயிர்களுக்கு இடையே நல்ல காற்றோட்டமும், அதிக வெளிச்சமும் கிடைக்கிறது. 'கோனோவீட்டர்' என்கிற கருவியை கொண்டு, எளிதாக களை எடுக்கும் பணிகளை மேற்கொள்ளலாம் என்பதால், பணியாட்கள் பற்றாக்குறையையும் இத்திட்டம் போக்குகிறது. இத்திட்டத்தின் மூலம், நடவுப்பணிகள் மேற்கொள்ளும் போது, செடிகளில் அதிக துார்களும், அதன் மூலம் அதிக நெல் மகசூலும் கிடைக்கிறது. சாதாரண நடவு முறையைவிட, கூடுதலாக, 10 - 15 மூட்டைகள் மகசூல் பெறப்படுகிறது. விவசாயிகள் எதிர்பார்க்கும் அளவிற்கு, நெல்லுக்கான விலை கிடைக்கவில்லை. அதிக மகசூல் பெற்றால் தான், தொழில் செய்ய முடியும் என்பதால், விவசாயிகள், இத்திட்டத்தில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

100சதவீதம்இலக்கு

இதுகுறித்து, பொன்னேரி அடுத்த, கூடுவாஞ்சேரி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி தாரகராமன் கூறுகையில், 'கடந்த சம்பா பருவத்தின் போது, மேற்கண்ட திட்டத்தின் மூலம், சாதாரண நடவுமுறையில் பயிரிட்டவர்களை காட்டிலும் கூடுதல் மகசூல் பெற்றேன். லாபம் இல்லையென்றாலும், நஷ்டம் தவிர்த்து உள்ளேன். தற்போது அதே திட்டத்தின் மூலம், நெல் பயிரிட்டு உள்ளேன்' என்றார். இதுகுறித்து, மீஞ்சூர் ஒன்றிய வேளாண் துறை இணை இயக்குனர் ரேவதி கூறுகையில், 'அதிக மகசூலுக்காக, பெரும்பாலான விவசாயிகள், திருந்திய நெல் சாகுபடி திட்டத்திற்கு மாறி வருகின்றனர். கடந்த, சம்பா பருவத்தின் போதும், 85 சதவீதம் பேர் பயிரிட்டனர். வரும் சொர்ணவாரி பருவத்தின்போது, 100 சதவீதம் மேற்கண்ட திட்டத்தை செயல்படுத்த திட்டமிட்டு உள்ளோம்' என்றார்.

**"இயற்கை விவசாயத்தில் மட்டுமே எதிர்காலம்'**

பந்தலூர் : பந்தலூர் அருகே, சி.டி.ஆர்.டி. வளாகத்தில்,"இயற்கை தேயிலை விழிப்புணர்வு சார்ந்த தொழில் நுட்பங்கள்' எனும் தலைப்பிலான விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. இதில், திட்ட ஒருங்கிணைப்பாளர் பிரகாஷ் வரவேற்றார். சி.டி.ஆர்.டி. இயக்குனர் ரங்கநாதன் தலைமை வகித்து பேசுகையில், "இயற்கை முறையிலான விவசாயத்தில், தரமான தேயிலை உற்பத்தி செய்வதுடன், உற்பத்தி அதிகரிக்கும்போது, அதனை சார்ந்து, தொழிற்சாலையும் அமைக்கலாம். பழங்குடியின விவசாயிகள் தேயிலை வாரியத்தின் சார்பில் விரைவில் "ஸ்மார்ட் கார்டு' கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்," என்றார். தேயிலை வாரிய வளர்ச்சி அலுவலர் சஜீவன் பேசுகையில், "தேயிலை வாரியத்தில் பதிவு செய்த விவசாயிகளுக்கு பல்வேறு பொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. அதனை பெற முறையாக பதிவு செய்து தகவல்களை கேட்டு தெரிந்துக்கொள்ள வேண்டும்," என்றார். தோட்டக் கலை துறை உதவி இயக்குனர் சிபிலா மேரி பேசுகையில், "குறுகிய காலத்தில் அதிக விளைச்சல்,லாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கத்தால், மண்ணின் இயற்கை தன்மையும் மாறியுள்ளது. இயற்கை விவசாயத்தால் கூடுதல் பலனும், கூடுதல் விலையும் கிடைக்கும். எனவே இயற்கையை சார்ந்து விவசாயம் செய்ய விவசாயிகள் ஒருங்கிணைய வேண்டும்," என்றார். விற்பனை அலுவலர் லட்சுமணன் பேசுகையில், "அரசு இயற்கை விவசாயத்திற்கு பல்வேறு சலுகைகளை வழங்கிடும் நிலையில்; அதனைப்பெற்று பயன்பெற வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் பசுமாடு வளர்த்தால், பால் கிடைப்பதுடன், இயற்கை விவசாயத்துக்கு தேவையான உரமும் கிடைக்கும்," என்றார். நிகழ்ச்சியில், திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் செந்தில்குமார், வாசுதேவன், ஸ்ரீஜா, அருண், சரோஜா, விஜயன் உள்ளிட்ட பழங்குடியின மக்கள் பங்கேற்றனர்.

பழங்குடியின விவசாயிகளுக்கு தேயிலை சேகரிப்பு பைகள் வழங்கப்பட்டது.

**கோடை மழையால் பூக்கும் காபிச்செடிகள்**

பந்தலூர் : பந்தலூர் பகுதியில், பெய்த கோடை மழையில், காபிச்செடிகள், பூக்கத்துவங்கியுள்ளது. பந்தலூர், கூடலூர் பகுதியில், தேயிலை விவசாயத்துடன் காபி விவசாயமும், அதிகளவில் மேற்கொள்ளப் படுகிறது. காபி அறுவடை நிறைவடைந்த நிலையில், மே மாத இறுதியில் பெய்யும் மழையில், மீண்டும் காபியில், பூக்கள் பூக்க துவங்கும். ஆனால், நேற்று முன்தினம் மாலை, கோடை மழை பெய்ததில், பந்தலூர் சுற்றுவட்டார பகுதிகளில், காப்பிச்செடிகளில், பூக்கள் பூக்க துவங்கியுள்ளன.விவசாயிகள் கூறுகையில்,"தண்ணீரை தொடர்ந்து தெளிப்பதன் மூலமோ அல்லது மழை பெய்தாலோ மட்டும்தான், தற்போது பூத்துள்ள பூக்களில் காய்கள் காய்க்க துவங்கும், இல்லாவிட்டால் பூக்கள் வீணாகி விடும்' என, கவலை தெரிவித்தனர்.

**மா சாகுபடியில் புதிய முறை; ஏக்கருக்கு 12 டன் மகசூல்**

காந்திகிராமம் : காந்திகிராம பல்கலை வேளாண் அறிவியல் மையத்தில் "உயர் அடர் நடவு' முறை மா சாகுபடியால் ஏக்கருக்கு 12 டன் கிடைக்கிறது. உலகில் 40 சதவீத மா இந்தியாவில் உற்பத்தியாகிறது. நம் நாட்டில் அதிக பரப்பில் மா சாகுபடி செய்தாலும் உற்பத்திதிறன் எக்டேருக்கு 6.1 டன்னாக உள்ளது. தமிழகத்தில் 4.5 டன்னாக உள்ளது. ஆனால் உலகளவில் உற்பத்தி திறன் 7.15 டன்னாக உள்ளது. அதிக பரப்பில் குறைந்த கன்றுகளை நடுதல், பராமரிப்பு இல்லாதது போன்றவற்றால் உற்பத்திதிறன் குறைகிறது. பழைய முறையில் ஏக்கரில் 10க்கு10 மீ இடைவெளியில் 40 கன்றுகள் நடப்படுகிறது. முழு உற்பத்தி திறன் 15 ஆண்டுகளில் துவங்கும். மகசூல் 4 டன். தற்போது "அடர் நடவு' முறையை அரசு பரிந்துரை செய்கிறது. இதில் ஏக்கருக்கு 5க்கு 5 மீ

இடைவெளியில் 160 கன்றுகள் நடலாம். முழு உற்பத்தி திறன் 8 ஆண்டுகளில் துவங்கும். மகசூல் 7 டன். "உயர் அடர் நடவு' என்ற புதிய முறையில் ஏக்கருக்கு 3க்கு 2 மீ இடைவெளியில் 666 கன்றுகள் நடலாம். முழுஉற்பத்தி திறன் 4 ஆண்டுகளில் துவங்கும். மகசூல் 12 டன் கிடைக்கும். இதில் அல்போன்சா, பங்கனப்பள்ளி, இமாம்பசந்த், தோத்தாபுரி ரகங்களை பயிடலாம். ஆண்டுதோறும் கவாத்து செய்வதால் குறைந்த உயரமே வளரும். இதனால் மருந்து தெளிப்பது, அறுவடை செய்வது எளிது. அறிவியல் மைய ஒருங்கிணைப்பாளர் உதயகுமார், தொழில்நுட்ப வல்லுனர் செந்தில்குமார் கூறுகையில், ""உயர் அடர் நடவு முறை குறித்த செயல்விளக்கம் அமைத்துள்ளோம். இதுகுறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க உள்ளோம்," என்றனர்.

**<u>விஞ்ஞானிகள் விவசாயிகள் சந்திப்பு</u>**

காந்திகிராமம் : காந்திகிராம பல்கலை வேளாண் அறிவியல் மையம், இந்திய வேளாண் ஆராய்ச்சி மையம் சார்பில் விஞ்ஞானிகள் விவசாயிகள் சந்திப்பு நிகழ்ச்சி ஆலந்தூரன்பட்டியில் நடந்தது. திட்ட ஒருங்கிணைப் பாளர் உதயகுமார் துவக்கி வைத்தார். பட்டுவளர்ச்சி மண்டல துணை இயக்குனர் யோகமாலா, உதவி இயக்குனர் சச்சிதானந்தன், வேளாண் உதவி இயக்குனர் மனோகரன் முன்னிலை வகித்தனர். தொழில்நுட்ப வல்லுனர்கள் சரவணன், செந்தில்குமார், சாகித்னிதாஜ், ரிலையன்ஸ் நிறுவன திட்ட மேலாளர் முகில்வாணன் பயிர் சாகுபடி பிரச்னைகள், தீர்வுகள் குறித்து பேசினர்.இந்திய வேளாண் ஆராய்ச்சி மையம் விஞ்ஞானிகள் பஞ்சவர்ணம், நாகேந்திரன், வளர்மதி, சுனில்குமார், கோட்டீஸ்வரராவ், சாகர்குலாப் விவசாயிகளுடன் கலந்துரையாடினர். விவசாயி கருப்பையா நன்றி கூறினார்.

## தென்னை ஓலைப்புழுக்களை அழிக்க விஞ்ஞானிகள் அறிவுரை

சாமிநாதபுரம் : தமிழ்நாடு ஆழியாறு தென்னை ஆராய்ச்சி நிலையம் சார்பில், பழநி அருகே தென்னை ஓலையில் நத்தை புழுக்களை கட்டுபடுத்துவதற்கான முகாம் நடந்தது. ஆழியாறு தென்னை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் பூச்சியல்துறை சீனிவாசன், மரபியியல்துறை சுப்ரமணியன், உளவியல்துறை ராஜ்குமார் ஆகியோர் சாமிநாதபுரம் விவசாயி பிராபகரின் 30 ஏக்கர் தென்னந்தோப்பில் ஓலைபுழுக்களின் பாதிப்புகளை கண்டறிந்தனர். அவற்றை கட்டுபடுத்துதற்கு அறிவுறுத்தினர். இதில் அதிகபாதிப்புக்குள்ளான தென்னை ஓலைகளை வெட்டிஎரிய வேண்டும். இரவு 7 மணி முதல் 11 மணிவரை தோப்பில் விளக்குபொரிகள் வைத்து அந்திபூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். வேர்மூலம் மோனோபாஸ்ட் மருந்து 10மில்லி, 10மில்லி தண்ணீரில் கலந்து பயன்படுத்தவேண்டும். மரத்தெளிப்பான் கொண்டு சைகுளோரான் மருந்தை ஒருலிட்டர் தண்ணீரில் 2 மி.லி., கலந்து ஓலைகளின் நன்குபடும்படி தெளிக்க வேண்டும். உள்ளிட்ட வழிமுறைகள் விளக்கப்பட்டது. ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

## சாமந்தி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

கச்சிராயபாளையம்: கல்வராயன் மலையில் சாமந்தி பூ சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கல்வராயன் மலை பகுதியில் விவசாயம் அதிகளவில் மேற்கொள்ளப்படுகிறது. மரவள்ளி, மக்காச் சோளம், சாமை அதிகளவில் சாகுபடி செய்தனர். தற்போது தோட்டப்பயிர்களான காய்கறிகள் மற்றும் பூச்செடிகள் போன்ற மாற்று பயிர்கள் சாகுபடி செய்கின்றனர். சாமந்தி பூ சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டிவருகின்றனர். 3 மாத பயிரான சாமந்தி பூ

சாகுபடியில் குறைந்த செலவில் அதிகமகசூல் கிடைப்பதால் கூடுதல் லாபம் கிடைக்கும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்தனர். தற்போது சாமந்தி பூவிற்கு கிராக்கி அதிகரித்துள்ளதால் கிலோ 40 ரூபாய்கு விற்பனை செய்வதாலும் விவசாயிகள் மேலும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## பலாப்பழம் சீசன் துவக்கம்; ஒரு பழம் ரூ.250 க்கு விற்பனை

சின்னமனூர் : கேரளாவில் பலாப்பழ சீசன் துவங்கியுள்ள நிலையில் சின்னமனூர் சந்தைக்கு குறைந்த அளவு பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளது. பலா காய்களுக்கு நல்ல கிராக்கி இருப்பதால் பழம் ஒன்று ரூ.250 க்கு விற்பனையாகிறது. சின்னமனூரில் பலாபழ சந்தை செயல்படுகிறது. மாவட்டத்தின் பிற பகுதியில் உள்ள சிறு வியாபாரிகளும் வெளி மாவட்ட மொத்த வியாபாரிகளும் பலாப்பழம் கொள்முதல் செய்ய இங்கு வருகின்றனர். கேரளாவிலிருந்து அதிகளவு பலாபழம் சின்னமனூர் சந்தைக்கு கொண்டு வரப்படும். குறிப்பாக இடுக்கி, தொடுபுழா மாவட்டங்களில் விளையும் பலாவில் 60 சதவீதம் சின்னமனூரில் சந்தைபடுத்தப்படும். இங்கிருந்து மதுரை, கோவை, சென்னை உள்ளிட்ட நகரங்களுக்கும் அனுப்பப்படுகிறது. கேரளாவில் பலாப்பழ சீசன் துவங்கியுள்ள நிலையில் எதிர்பார்த்த வரத்தில்லை. வரத்து குறைவாக இருப்பதால் ஒரு பழம் ரூ.250 க்கு விற்பனையாகிறது. மொத்த வியாபாரி அழகர்சாமி கூறியதாவது: உத்திரபிரதேசம் உள்ளிட்ட வட மாநிலங்களில் பலா காய்களை தோல் சீவி சமைக்கின்றனர். காய்கறி கூட்டாக பலாகாய் பயன்படுத்தப்படுவதால் மூன்று கிலோ அளவிற்கு விளைந்ததும் பறித்து வட மாநிலங்களுக்கு அனுப்புகின்றனர். தோல் சீவிய பலா காய்களை சிறு, சிறு துண்டுகளாக வெட்டி சர்க்கரை, தேன் கலந்து பெரிய ஓட்டல்களில் சிற்றுண்டியாக விற்பனை செய்கின்றனர். பலா காய்களுக்கு நல்ல கிராக்கி இருப்பதால் பழமாகும் வரை காத்திருக்காமல் பறிக்கின்றனர். சிறு விவசாயிகளிடம் உள்ள பலா

பழங்கள் மட்டும் விற்பனைக்கு வருகின்றன. குறைந்த அளவு வரத்திருப்பதால் விலை அதிகரித்துள்ளது, என்றார்.

## மாவட்டத்தில் 13 ஆயிரம் விவசாயிக்கு பயிர் காப்பீடு தொகை ரூ.27.64 கோடி; அரசு ஒதுக்கீடு

சிவகங்கை : சிவகங்கையில் 2013-14ல் பயிரிட்ட நெல்லுக்கு காப்பீடு செய்து கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்ற 13 ஆயிரம் விவசாயிகளுக்கு இழப்பீடாக ரூ.27.64 கோடி அரசு ஒதுக்கியுள்ளது. மாவட்டத்தில் 2013-14ல் நெல் பயிரிட்ட விவசாயிகள், கூட்டுறவு வங்கிகள் மூலம் நேஷனல் பயிர் இன்சூரன்ஸ் கம்பெனியில் காப்பீடு செய்திருந்தனர். அந்த வகையில் கூட்டுறவு வங்கியில் பயிர் கடன் பெற்ற 14 ஆயிரத்து 945 விவசாயிகள், பிரீமியமாக ரூ.2.47 கோடி; வங்கியில் கடன் பெறாமல் 46 ஆயிரத்து 348 விவசாயிகள், பிரீமியம் ரூ.5.01 கோடி வரை செலுத்தினர். ரூ.110 கோடி: வறட்சி பாதித்த நெற்பயிருக்கு இழப்பீடாக ரூ.110 கோடி வரை வழங்க, வருவாய், புள்ளியியல், வேளாண்மை துறையினர் மூலம் ஆய்வு செய்த மாவட்ட நிர்வாகம் அரசுக்கு பரிந்துரை அனுப்பினர். எனவே, கடந்த ஆண்டு நெற்பயிர் பாதித்த விவசாயிகள் இழப்பீடு வழங்க கோரி, விவசாயிகள் குறைதீர் கூட்டங்களை புறக்கணித்து பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டனர். ரூ.27.64 கோடி: விவசாயிகளின் போராட்டத்தை அடுத்து, அரசு முதற்கட்டமாக சிவகங்கை மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.27.64 கோடி பயிர் காப்பீட்டிற்கான இழப்பீடாக ஒதுக்கியுள்ளது. கூட்டுறவு வங்கியில் கடன் பெற்ற 14,945 பேரில் 13,258 விவசாயிக்கு ரூ.27.64 கோடி ஒதுக்கியுள்ளனர். தேசிய வங்கியில் காப்பீடு செய்த விவசாயிக்கு ரூ.3 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விவசாயிகள் சட்ட விழிப்புணர்வு கூட்டம்**

திண்டிவனம், : இன்றைய சூழலில் நீதித்துறை பொது மக்களுக்கு பயன்படுகிறதா, சமூக விரோதிகளுக்கு பயப்படுகிறதா என்பது குறித்து சட்ட விழிப்புணர்வுக்கான கலந்துரையாடல் கூட்டம் விழுப்புரம் மாவட்டம் வீடூர் அணை பூங்காவில் நடந்தது. விவசாயி மக்கள் சட்ட விழிப்புணர்வு சங்கத் தலைவர் தாமோத ரன் தலைமை தாங்கினார். இதில் வழக்குகள் மற்றும் நீதிமன்றங்களால் அலைகழிக்கப்பட்ட விவசாயிகள், சாமனிய மக்கள் என ஏராள மானோர் கலந்து கொண்டனர். சட்டத்தில் இல்லாததை நடைமுறைப்படுத்தும் வழக்கறிஞர்கள், காவல்துறையினர் மற்றும் நீதிமன்றங்கள் இவர்களின் போக்கினை தமிழக உள்துறை அமைச்சகத் திற்கு தெரியப்படுத்துவது, சட்டம் குறித்து மத்திய, மாநில அரசுகளின் கவனத்திற்கு கொண்டு செல்வது என தீர்மானங் கள் நிறைவேற்றப்பட்டன. நீதித்துறை அல்லாத விவசாயிகள் சட்ட விழிப்புணர்வு கூட்டம் நடத்தியது தமிழகத்தில் இதுவே முதல்முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

**1.75 லட்சம் மூட்டைகள் தேக்கம் கொங்கணாபுரத்தில் பருத்தி ஏலம் ரத்து**

இடைப்பாடி, : சேலம் மாவட்டம் கொங்கணாபுரத்தில் உள்ள திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தேறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் இந்த ஏலத்தில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், கர்நாடக மாநிலத்தில் இருந்தும் விவசாயிகள் பருத்தியை விற்பனைக்காக கொண்டு வருவது வழக்கம். இதேபோல், திரளான வியாபாரிகளும் பருத்தி ஏலத்தில்

பங்கேற்று கொள்முதல் செய்வர். இந்நிலையில், கடந்த மாதம் பருத்தி வரத்து அதிகரித்தது. வாரத்தில் 3 நாட்களையும் தாண்டி, திங்கட்கிழமையும் பருத்தி ஏலம் விடப்பட்டது. ஆனால், ஏலம் எடுத்த வியாபாரிகள் பருத்திக்கான பணத்தை கட்டிவிட்டு, அதனை எடுத்துச்செல்லாமல் உள்ளனர். இதனால், விற்பனை செய்யப்பட்ட பருத்தி மூட்டைகள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்திலேயே குவிந்து கிடக்கிறது. ஆக மொத்தம் ஏலம் விடப்பட்ட 1.75 லட்சம் மூட்டைகள் எடுத்துச்செல்லாமல் அப்படியே உள்ளதால் மேற்கொண்டு பருத்தி மூட்டைகளை அடுக்கி வைக்க முடியாத நிலை காணப்படுகிறது. இதனால், கொங்கணாபுரத்தில் பருத்தி ஏலம் ரத்து செய்யப்பட்டது. இதுபற்றி அறியாத வெளிமாவட்ட விவசாயிகள் நேற்று பருத்தி மூட்டைகளை விற்பனைக்காக எடுத்து வந்தனர். ஏலம் ரத்து பற்றிய தகவல் அறிந்து அதிர்ச்சி அடைந்த அவர்கள், வெளியிடங்களில் வாடகைக்கு இடம் பிடித்து பருத்தியை இருப்பு வைத்துச்சென்றனர். மேலும், சிலர் தனியார் மண்டிகளில் கிடைத்த விலைக்கு பருத்தியை விற்பனை செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டதாக தெரிவித் தனர்.

**ஈரோடு மாவட்டத்தில் ஓராண்டில் 1,043 மெட்ரிக் டன் பட்டுக்கூடு உற்பத்தி**

ஈரோடு, :ஈரோடு மாவட்டத்தில் 2014-15ம்ஆண்டில் 36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆயிரத்து 43 மெட்ரிக் டன் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பட்டு வளர்பபு தொழிலை ஊக்குவிக்கும் வகையில் செயல்படுத்தப்பட்டு வரும் மானிய திட்டங்களை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. குறைந்த முதலீட்டில் அதிக வருவாயை பெற்று தரும் வகையில் பட்டு வளர்ப்பு தொழிலுக்கு அரசு பல்வேறு மானிய திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் 5 ஆயிரத்து 13 ஏக்கர் பரப்பளவில் 2 ஆயிரத்து 579 விவசாயிகள் பட்டு தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். இதன் மூலமாக சுமார் 25 ஆயிரம் தொழிலாளர்கள்

நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு பெற்று வருகிறார்கள். கடந்த 2014- 15ம்ஆண்டில் 36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,043 மெட்ரிக் டன் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டு 160 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. மத்திய, மாநில அரசுகளின் சார்பில பட்டு வளர்ப்பு தொழிலை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு மானிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வீரிய இன மல்பெரி நடவிற்கு மானியமாக ஒரு ஏக்கருக்கு 10 ஆயிரத்து 500 ரூபாயும், மல்பெரி தோட்டங்களுக்கு சொட்டுநீர் பாசனம் அமைக் ஏக்கருக்கு சிறு, குறு விவசாயிகளுக்கு 30 ஆயிரம் ரூபாயும், இதர விவசாயிகளுக்கு 22 ஆயிரத்து 500 ரூபாயும், புழு வளர்ப்பு மனை அமைக்க 82 ஆயிரத்து 500 ரூபாயும், புழு வளர்ப்பிற்காக மானிய உதவியுடன் புழு வளர்ப்பு தளவாடங்கள் வாங்க 52 ஆயிரத்து 500 ரூபாயும் மானியமாக வழங்கப்படுகிறது. பட்டு வளர்ச்சித்துறை சார்பில் பட்டு வளர்ப்பு தொழிலை ஊக்குவிக்கும் வகையில் செயல்படுத்தப்பட்டு வரும் மானிய திட்டங்களை பெற்று விவசாயிகள் பயன் பெற பட்டு வளர்ச்சித்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

## <u>நீர்ப்பிடிப்பு பகுதியில் மழையால் அமராவதி அணைக்கு நீர்வரத்து</u>

உடுமலை, : நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை பெய்ததால் அமராவதி அணைக்கு நீர்வரத்து ஏற்பட்டது. உடுமலை அருகே உள்ளது அமராவதி அணை. திருப்பூர், கரூர் மாவட்டங்களில் 54 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இதன் மூலம் பாசன வசதி பெறுகின்றன. கல்லாபுரம், ராமகுளம் வாய்க்கால் பாசனங்களும் நேரடியாக பயன்பெறுகின்றன. அதுமட்டுமின்றி நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு முக்கிய குடிநீராதாரமாகவும் விளங்குகிறது. பழைய, புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு தொடர்ந்து மாறி,மாறி தண்ணீர் திறந்து விடப்பட்டதாலும், கடந்த 3 மாதமாக மழையே பெய்யாததாலும் அணையின் நீர்மட்டம் சரிந்தது. இதனால் கல்லா புரம், ராமகுளம் பாசனத்தில் 300 ஏக்கரில்

நெற்பயிர்கள் போதிய தண்ணீரின்றி வாடுகின்றன. அதை காப்பாற்ற அணைக்குள் கால்வாய் வெட்டி வரும் நீரை நேரடியாக கல்லாபுரம், ராமகுளம் வாய்க்கால் ஷட்டருக்கு திருப்பி விவசாயிகள் பயன்படுத்தினர். இந்நிலையில் நீர்ப்பிடிப்பு பகுதியில் நல்ல மழை பெய்தது. இதன் காரணமாக கடந்த 6ம் தேதி முதல் அணைக்கு நீர்வரத்து துவங்கியது. முதல்நாளில் 328 கனஅடி, 7ம் தேதி 230 கனஅடி,நேற்று 195கனஅடி தண்ணீர் வந்தது. தற்போது அணையின் நீர்மட்டம் 25 அடி. அணைக்கு நீர்வரத்து இருந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி யடைந்துள்ளனர்.

**<u>ரோடு ஓரம் அமோகமாக விற்பனையான சுக்கு கருப்பட்டி சீசன் முடிந்தது</u>**

மதுரை, : ரோடு ஓரம் அமோகமாக விற்பனை செய்யப்பட்ட பனை கல்லில் தயாரிக்கப்படும் சுக்கு கருப்பட்டி சீசன் முடிந்தது. பனை மரத்தில் கிடை க்கும் உணவு பொருளில் மிகவும் முக்கியமானது சுக்கு கருப்பட்டி ஆகும். இது உடல் சூடு, ஜீரணம் ஆகியவற்றிற்கு சிறந்த உணவு பொருள். இது பனை மரத்தில் இருந்து கிடைக்கும் கல்பாகு மூலம் தயாரிக்கப்படுகிறது. பனைமரத்து கள்ளை பாத்திரத்தில் ஊற்றி காய்ச்சும்போது அரைவேக்காடு பாகுவை பதத்துடன் கொட்டாமிச்சியில் (சிரட்டையில்) ஊற்றி தரையில் காயவைத்து சுமார் 3 மாத காய்ச்சலுக்கு பின்புதான கருப்பாட்டியாக நமக்கு கிடைக்கிறது. பனைகள்ளில் சுக்கு கலந்து காய்ச்சும்போது முக்கால் பதத்தில் பாகு வரும்போது அச்சில் ஊற்றில் காயவைத்து 3 நாட்களில் விற்பனைக்கு வருவது சுக்கு கருப்பட்டி ஆகும். இதே பனங்கள்ளில் முழு அளவு காய்ச்சி எடுக்கும்போது பனங்கற்கண்டு கிடைக்கிறது. டிசம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை பனங்கள் அதிகளவில் கிடைக்கும். அந்த காலத்தில் மட்டும் சுக்கு கருப்பட்டி தயாரித்து விற்பனைக்கு வழங்கப்படுகிறது. தற்போது மதுரை, தேனி, விருதுநகர் திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டத்தில் ரோடுகளின் ஓரம் சுக்கு கருப்பட்டி விற்பனை செய்யப்பட்டது. இவற்றை தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டத்தில்

உள்ள பனை பொருள் விற்பனையாளர்கள் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். இதுகுறித்து தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியை சேர்ந்த செல்வகுமார் கூறுகையில்,“ இது போன்று சுக்கு கருப்பட்டி பொது வாக ஜனவரி பிப்ரவரி மாதத்தில் மட்டுமே விற்பனைக்கு வரும். இதனால் இந்த மாவட்டத்தில் உள்ள விற்பனையாளர்கள் தங்களுக்கு தேவையான அளவு சுக்கு கருப்பட்டி குறித்து உற்பத்தியாளர்களிடம் பணம் கொடுத்த முன்பதிவு செய்துவிடுவோம். பணம் பெற்றவுடன் தங்களிடம் உள்ள பனை பாகுவை கொண்டு சுக்கு கருப்பட்டி தயாரித்து மூன்றாவது நாளில் கொடுத்துவிடுவார்கள். ஒரு நபருக்கு ஒன்றை டன் முதல் 2 டன் வரை சுக்கு கருப்பட்டி வழங்குவார்கள். அதை நாங்கள் போட்ட முதல், கூலி ஆகியவற்றை கண க்கிட்டு மாவட்டம் தோறும் சென்று கிலோ ரூ.180க்கு விற்பனை செய்கிறோம். இந்த கருப்பட்டி திறந்த பாத்திரத்தில் வைத்திருந்தால் கசிவு கொடுக்காது. பல மாதத்திற்கு அதே சுவையுடன் இருக்கும். சாதாரண கருப்பட்டி தயார் செய்த மூன்று மாதம் கழித்துதான் பொது மக்களுக்கு கிடைக்கும. அதில் காயவைக்கும்போது மணல் இருக்க வாய்ப்பு உண்டு. ஆனால் சுக்கு கருப்பட்டியில் மணல் இருக்காது. சுக்கு கருப்பட்டிக்கான சீசன் முடிந்துள்ளது. இனிமேல் அடுத்த டிசம்பர் கடைசியில்தான் சுக்கு கருப்பட்டி கிடைக்கும்என்றார்.

## <u>கால்நடை பாதுகாப்பு முகாம்</u>

சிவகங்கை, : காளையார்கோவில் கால்நடை மருந்தகம் சார்பில் காணை தடுப்பூசி முகாம் நடந்தது. சிலையாவூரணி, செவல்புஞ்சை, காளக் கண்மாய், நூத்தண்கண்மாய், மருதக்கண்மாய், பருத்திக்கண்மாய், காஞ்சிப்பட்டி ஆகிய கிராமங்களில் நடந்த முகாமில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. குடற்புழு நீக்கம், செயற்கைமுறை கருவூட்டல், சினை பரிசோதனை மற்றும் பொது சிகிச்சை அளிக்கப்பட்டது. தீவனபுல் வளர்ப்பு, கால்நடை பராமரிப்பில் நவீனம் குறித்தும் விவசாயிகளுக்கு ஆலாசனை வழங்கப்பட்டது. கால்நடை உதவி மருத்துவர்கள் காமுகதிரவன், ஆவின் மருத்துவர்

சண்முகநாதன், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் மனுவேல், வேதவள்ளி, காமராஜ் ஆகியோர் சிகிச்சை அளித்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஆதிதிராவிட விவசாயிகள் 100 சதவீத மானியத்தில் மா மரக்கன்றுகள், கோ-கோ செடிகள் பெறலாம் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் தகவல்**



கிணத்துக்கடவு, ஆதிதிராவிட விவசாயி கள் மா மரக்கன்றுகள், கோ-கோ செடிகள், இடுபொருட்கள் 100 சதவீத மானியத்தில் பெறலாம் என்று தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் விவேகானந்தன் தெரிவித் துள்ளார்.

100சதவீதமானியம்

கிணத்துக்கடவு தோட் டக்கலைத்துறை உதவி இயக்குனர் விவேகானந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

தோட்டக்கலைத்துறை மூலம் நடப்பு ஆண்டு 2014- 15-ல் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி ஆதிதிராவிட விவசாயிகளுக்கு ஏற்கனவே விளக்கி கூறப்பட்டுள்ளது. நிதியாண்டு முடிவடையும் தருவாயில் தற்போது தேசிய தோட்டக்கலை இயக்கம் பயிர் பரப்பு அதிகரித்தல் திட் டத்தின் படி மா மரக்கன்றுகள், கோ-கோ செடிகள் மற்றும் இடு பொருட் கள் 100 சதவீதம் மானியத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விசைத்தெளிப்பான்

காய்கறி பயிர்களை பாது காக்க பிளாஸ்டிக் மூலம் மல்ச்சிங் போட ஒரு ஹெக்டே ருக்கு ரூ. 16 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. 8 முதல் 12 லிட்டர் கொள்ளளவு உள்ள விசைத்தெளிப்பான் ரூ.3 ஆயிரத்து 100 மானியத்தில் வழங்கப்படுகிறது. மானாவாரி வேளாண்மை அபிவிருத்தி மூலம் தோட்டக்கலை பண்ணை அமைத்தல் திட்டத் தில் மா ஒட்டு மரக்கன்றுகள் மற்றும் இடு பொருட்கள் ரூ. 25 ஆயிரம் மானியத்தில் வழங்கப்படுகிறது. மண்புழு உரபடுகை அமைக்க ரூ. 8 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் பந்தல் அமைக்க ஒரு ஹெக்டேருக்கு ரூ.2 லட்சம் மானியம் மற்றும் கம்பி கட்டி கொடி வகைப் பயிர்கள் நடவு செய்ய ரூ.25 ஆயிரம் மானியம் வழங்கப் படுகிறது.

மூங்கில்சாகுபடி

தேசிய மூங்கில் இயக்கம் மூலம் மூங்கில் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 35 சதவீதம் மானியத்தில் மூங்கில் நாற்றுகள் வழங்கப்படுகிறது. மேற்கண்ட திட்டங்கள் மூலம் கிணத்துக்கடவு ஆதிதிராவிட விவசாயிகள் பயன்பெற்று கொள்ளலாம். மேலும் அனைத்து விவசாயிகளும் மண்மாதிரி மற்றும் நீர் மாதிரி எடுத்து ஆய்வு செய்து மண் மற்றும் நீரில் உள்ள சத்துக் களை அறிந்து அதற்கேற்ற மாதிரி பயிர் செய்து உரமிட லாம். இவ்வாறு அந்த அறிக் கையில் கூறப்பட்டுள்ளது.

## <u>விவசாயிகளுக்கு மானியத்தொகை காமராஜ் எம்.எல்.ஏ. வழங்கினார்</u>



நாகை மாவட்டம் வேதாரண்யத்தை அடுத்த புஷ்பவனம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வளாகத்தில் புஷ்பவனம் மற்றும் பெரியக்குத்தகை பகுதிகளை சேர்ந்த கார்த்திகை கிழங்கு பயிர் செய்யும்

விவசாயிகளுக்கு தோட்டக் கலை துறை சார்பில் மானிய தொகை வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு கார்த்திகை கிழங்கு உற்பத்தியாளர் நலச்சங்க தலைவர் நடராஜன் தலைமை தாங்கினார். தோட்டக்கலை உதவி அலுவலர் வைரமூர்த்தி வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக வேதாரண்யம் சட்டமன்ற உறுப்பினர் காமராஜ் கலந்து கொண்டு கார்த்திகை கிழங்கு விவசாயிகள் 88 பேருக்கு ரூ.6 லட்சத்து 84 ஆயிரம் மானிய தொகையை வழங்கி பேசினார். விழாவில் கார்த்திகை கிழங்கு உற்பத்தியாளர் நலச்சங்க செயலாளர் கந்தசாமி, பொருளாளர் வைரமூர்த்தி, ஒன்றிய மாணவரணி துணை செயலாளர் பிரபு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**<u>மண்டலவாடியில் பூச்சி, நோய் மேலாண்மை குறித்த பண்ணைப் பள்ளி</u>**



ஜோலார்பேட்டை வட்டாரம், மண்டலவாடி கிராமத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின்கீழ் நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை பற்றிய பண்ணைப் பள்ளி தனியாருக்கு சொந்தமான நிலத்தில் நடத்தப்பட்டது. விரிஞ்சிபுரம் வேளாண் ஆராய்ச்சி நிலைய தலைவர் பாண்டியன் தலைமை தாங்கி, ஒருங்கிணைந்த பூச்சி, நோய் நிர்வாகம் மேற்கொள்வது குறித்து விளக்கம் அளித்தார். வேளாண்மை உதவி இயக்குனர் கவுதம்குமார், நிலக்கடலையில் ஒருங்கிணைந்த உரம், மேலாண்மை பற்றி விளக்கம் அளித்தார். வேளாண்மை அலுவலர் அர்ச்சனா, மாற்றுப்பயிர் சாகுபடி செய்வது குறித்து விளக்கம் அளித்தார். வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள் குறித்து துணை வேளாண்மை அலுவலர் ராஜ்குமார் விளக்கம் அளித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் உமாமகேஸ்வரி, பூச்சி, நோய் மாதிரிகள் காண்பித்து விளக்கம் அளித்தார். இதில் ஏராளமான

விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இதற்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் விமல்குமார், பாலாஜி ஆகியோர் செய்திருந்தனர்.